கவனிக்க.- 21.04.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2017 - 2017 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2017.04.28

*2017 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 757 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மே மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

**பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் - கட்டுநாயக்க**

பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (NDES) கற்கைநெறிக்கான பொறியியல் விஞ்ஞான விசேட பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு - 2017 அணி

கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மேற் காட்டப்பட்ட கற்கைநெறிக்கான 2017 ஆம் ஆண்டிற்கான அணிக்கு பொறியியலின் விசேட பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்யவென இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **அனுமதிக்கான கல்வித் தகைமை.**- கீழ்வரும் தகைமைகளுடன் கூடிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியும்.

1.1 க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் மொழி(சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) ஆகியவற்றில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

1.2 சமுத்திரப் பொறியியல் பாடநெறி தவிர்ந்து ஏனைய அனைத்து பாடநெறிகளுக்குமென க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

சமுத்திரப் பொறியியல் பாடநெறிக்கென க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது.

அத்துடன்

1.3 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒரே அமர்வில் பெற்றுக்கொள்ளப்பட்ட சித்திகள்

அல்லது

1.4 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சித்திகள் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தை பிரதான பாடமாக கொண்டு பெறப்பட்ட சித்தி கட்டாயமானது)

2. **வயது**.- 31.12.2017 அன்று 18 மற்றும் 25 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. **காலப்பகுதி மற்றும் கற்கைநெறி அட்டவணை**.- இக்கற்கைநெறி நான்கு ஆண்டுகளுக்குரியது. இதில் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு 18 மாத கால கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்துடன்30 மாத கால கைத்தொழிற் பயிற்சியும் இணைந்ததாக காணப்படும்.

| | |
|---|---|
| IET இல் அடிப்படை அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | - 06 மாதங்கள் |
| தொழிற்சாலையில் அடிப்படை கைத்தொழிற் பயிற்சி | - 12 மாதங்கள் |
| IET இல் பொது அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | - 06 மாதங்கள் |
| தொழிற்சாலையில் பொது கைத்தொழிற் பயிற்சி | - 12 மாதங்கள் |
| IET இல் விசேட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | - 06 மாதங்கள் |
| தொழிற்சாலையில் விசேட கைத்தொழிற் பயிற்சி | - 06 மாதங்கள் |

அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள், கோட்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் ஆய்வுகூட பயிற்சிகள் என்பவற்றை உள்ளடக்கியிருப்பதோடு அவைபொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும்.

கைத்தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அங்கீகரிக் கப்பட்ட கைத்தொழில் நிறுவனங்களில் நடாத்தப்படும்.

கற்கைநெறியின் தொடக்கத்தில் ஆங்கில பாடநெறி ஒன்றும் நடாத்தப்படும். இதற்கு ஆங்கில பாடநெறிக்கென தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்கள் அனைவரும் பங்கேற்பது அவசியமாகும்.

4. **IET இனால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் பின்வருமாறு** :

A. *சிவில் பொறியியல் துறை*

(1) சிவில் - கட்டிடம் மற்றும் கட்டமைப்பு பொறியியல்.
(2) சிவில் - பெருந்தெரு மற்றும் தொடரூந்துப் பாதை பொறியியல்.
(3) சிவில் - நீர் மற்றும் சூழற் பொறியியல்.

B. *மின் பொறியியல் துறை மற்றும் தொடர்பாடல்*

(4) மின்னியல் - இலத்திரனியல் மற்றும் தொடர்பாடற் பொறியியல்
(5) மின்னியல் - மின் வலு பொறியியல்

C. *இயந்திரவியல் பொறியியல் துறை*

(6) இயந்திரவியல் - தன்னியக்க பொறியியல்
(7) இயந்திரவியல் - இயந்திர பொதுப் பொறியியல்
(8) இயந்திரவியல் - சமுத்திரப் பொறியியல்

(a) IET இன் சமுத்திரப் பொறியியல் பாட நெறியின் தர முகாமைத்துவ முறைமை ISO 9001 தர முகாமைத்துவ முறை யினூடாக சான்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(b) சமுத்திரப் பொறியியல் பாடநெறிக்கு அமைவாக STCW 95, அதனது திருத் தங்கள் மற்றும் சர்வதேச சமுத்திர வியல் நிறுவனத்தின் (IMO) மாதிரி பாடநெறி 7.04 என்பவற்றுடன் இணைந்த சமுத்திரப் பொறியியல் பாடநெறியின் செயல்பாட்டு தரத்தில் தேவைப்படும் அடிப்படை அறிவு, புரிதல்கள் மற்றும் திறமை போன்றனவற்றிற்கு முகங் கொடுக்கும் வகையில் கல்விசார் அறிவு றுத்தல்கள் மற்றும் கைத்தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கு நிறுவனமானது கடமைப்பட்டுள்ளது.

5. **அறிவுறுத்தல்களுக்கான மொழி மூலம்.**- சகல கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களும் ஆங்கில மொழியினூடாக மேற்கொள்ளப்படும்.

6. **பயிலுநர் உடன்படிக்கை :**

6.1 தெரிவு செய்யப்பட்ட அனைத்து பயிலுநர்களும் பயிற்சி நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட கட்டுப்பட்டுள்ளனர். குறித்த ஒப்பந்தமானது பயிற்சி நிறுவனம் மற்றும் பயிலுநர் ஆகிய இரு தரப்பினதும் கடப்பாடுகளை உள்ளடக்கியிருக்கும். பாடநெறி முடிவின் போது மீளப்பெறக் கூடியதான ரூபா 5,000 ஐ மாணவர்கள் பதிவினை மேற்கொள்ளும் போது வைப்புச் செய்தல் வேண்டும். பாடநெறிக்கான பதிவினை மேற்கொண்ட திகதியிலிருந்து இரு வாரங்களுக்குள் விலகிச் செல்லும் மாணவர்களின் வைப்புத் தொகை மீளளிக்கப்படும்.

6.2 சமுர்த்தி அட்டையின் மூலப்பிரதியுடன் கிராம உத்தியோகத்தரின் கையொப்பத்துடனும் பிரதேச செயலாளரின் அனுமதியுடனும் கூடிய கடிதத்தையும் சமர்ப்பித்த சமுர்த்தி பயனாளிகள் மீளளிக்கப்படும் வைப்பிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

6.3 தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 500 ஐ பதிவுக் கட்டணமாக பதிவின் போது செலுத்துதல் வேண்டும்.

6.4 பயிற்சி காலப்பகுதியின் முடிவில் தொழில் வாய்ப் புக்கான எந்தவொரு உத்தரவாதமும் வழங்கப்பட மாட்டாது.

6.5 பதிவுசெய்யப்பட்ட அனைத்து மாணவர்களும் நிறுவனத்தினால் பாடங்களுக்கென பாடநெறி காலப்பகுதியில் தீர்மானிக்கப்படும் குறைந்தபட்ச வருகையை கட்டாயம் பூர்த்தி செய்தல் வேண்டும். இத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாத எவரும் பரீட்சை மற்றும் மதிப்பீடுகளுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதோடு பாடநெறியிலிருந்தும் வெளியேற நேரிடும்.

7. **சான்றிதழ் வழங்குதல்.**- சகல பரீட்சைகள் மதிப்பீடுகள் மற்றும் கடப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் நிலையில் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

8. **தெரிவு செய்யப்படும் முறை :**

8.1 முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச நுளைவுத் தகைமைகளை கொண்டிருப்பவரும் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்டவரும் தகுதியுடையவராவர். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தெரிவுகள் அமையும்.

8.2 தகுதியுடைய தேர்வுநாடிகள் உளச்சார்பு எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு ஆங்கில மொழியினூடாக தோற்றுதல் வேண்டும். (தகுதி பெற்ற தேர்வு நாடிகள் முன்னதாகவே அறிவிக்கப்படுவர்.)

8.3 எழுத்துப் பரீட்சையின் உயர் புள்ளிகளினடிப்படையில், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான விண்ணப்ப தாரிகளே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

8.4 விண்ணப்பதாரிகள் இறுதியாக தேர்வு செய்யப்படுவது எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் புள்ளிகளின் அடிப்படையிலாகும்.

8.5 சமுத்திரப்பொறியியல் பாடநெறிக்கு தெரிவு செய்யப் பட்டவர்கள் பதிவிற்கு முன்னதாக தமது சொந்த செலவில் மருத்துவ பரிசோதனை ஒன்றினை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

9. **விண்ணப்பங்கள் :**

9.1 கல்விச் சான்றிதழ்களின் [க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.)] சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக இணைக்கப்படுதல் வேண்டும். கல்விச் சான்றிதழ் களின் பிரதிகளை கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9.2 சகல விண்ணப்பதாரிகளும் கீழ்வரும் அடிப்படையில் பரீட்சைக்கான மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும்.

(a) விண்ணப்பப்படிவமானது தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையில் ரூபா 200 செலுத்தி பெறப்பட்டிருப்பின் ரூபா 500 ஐ வைப்புச் செய்தல் வேண்டும்.

(b) விண்ணப்பப்படிவமானது இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்டிருப்பின் அல்லது வேறு ஏதேனும் வகையில் பெறப்பட்டிருப்பின் ரூபா 700 ஐ வைப்புச் செய்தல் வேண்டும்.

9.3 வைப்புச் சீட்டானது பின்வரும் விடயங்களை தெளிவாக வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும்:

(i) கிளைக் குறியீடு மற்றும் கணக்கிலக்கம் : 276-1-001-8-6351396.

(ii) பற்று அறிவுறுத்தல் : "கட்டுநாயக்க மக்கள் வங்கிக் கிளையில்" காணப்படும் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் வசூலிப்பு கணக்கிலக்கம் : 276-1-001-8-6351396 இற்கு பற்று வைத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி.

9.4 விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை IET இன் இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(www.iet.edu.lk)

9.5 விண்ணப்பப்படிவங்களை "பதிவாளர், பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம், கோவில் வீதி, கட்டுநாயக்க" என்னும் முகவரியில் ரூபா 200 ஐச் செலுத்தி நேரடியாகவோ அல்லது தபால் மூலமாயின் முத்திரையுடன் கூடிய சுய முகவரியிடப்பட்ட தபால் உறையுடன் (9" × 4") ரூபா 200 இற்கான காசுக் கட்டளையை மேற்குறித்த முகவரிக்கு 26.05.2017 ஆந் திகதி வரை அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம். குறித்த காசுக் கட்டளையை கட்டுநாயக்க தபால் அலுவலகத்தில் மாற்றம் செய்யக்கூடியவாறு "கணக்காளர், பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம்" எனும் பெயருக்கு வரைதல் வேண்டும்.

(தொலைபேசி இல. : 011-2252833/ 011-2252834/ 011-2254667)

9.6 விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) தவிர்ந்த ஏனைய தனியார் நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்ய வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர். (NAITA) விலிருந்து கொள்வனவு செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படுமாயின் வைப்புத்தொகை ரூபா 700 கட்டாயமானதாகும்.

9.7 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் அதிகாரம் பெற்ற வங்கி அலுவலரினால் கையெழுத்திடப்பட்ட வைப்புச் சீட்டையும் இணைத்து, "பணிப்பாளர்/ அதிபர், பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம், கோவில் வீதி, கட்டுநாயக்க" என்னும் முகவரிக்கு 02.06.2017 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2017 ஆம் ஆண்டுக்கான விசேட பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்" என குறிப்பிடுதல் அவசியமானதாகும். தாமதமான விண்ணப்பங்கள் மற்றும் நேரடியாக கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.8 அரசாங்க பல்கலைக்கழகங்கள் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளில் முழு நேரமாக டிப்ளோமா அல்லது பட்டத்தை பூர்த்தி செய்த அல்லது தற்போது தொடர்ந்து கொண்டிருக்கும் எவரும் விண்ணப்பிக்க தகுதியுடையோர் அல்ல.

9.9 விண்ணப்பப்படிவங்களின் பற்றுச்சீட்டு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

9.10 விண்ணப்பப்படிவங்களை தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பின்வரும் அலுவலகங்களிலும் ரூபா 200 ஐ செலுத்தி 02.06.2017 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

(i) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 971, ஸ்ரீ ஜயவர்தன புர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரிய.
தொ. பே. இல. : 011-2888782-7

(ii) கைத்தொழிற் பொறியியல் பயிற்சி நிறுவனம், 581, காலி வீதி, கட்டுபெத்தை, மொரட்டுவை.
தொ. பே. இல. : 011-2647393/ 011-2643356

(iii) தன்னியக்க பொறியியல் பயிற்சி நிறுவனம், 07, டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, ஒறுகொடவத்தை, வெல்லம்பிட்டிய.
தொ. பே. இல. : 011-2572977/ 011-2643356

(iv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 10/4, மல்வத்த வீதி, பதுளுபிட்டிய, பதுளை.
தொ. பே. இல. : 055-2230644

(v) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 642, வித்தியாலய வீதி, புதிய நகரம், இரத்தினபுரி.
தொ. பே. இல. : 045-2228667

(vi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,இல. 27ஏ, திறந்த பல்கலைக்கழக வீதி,நூபே, மாத்தறை.
தொ. பே. இல. : 041-2226958

(vii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 108/2 பீ, திவங்கபோதி மாவத்தை, கண்டி.
தொ. பே. இல. : 081-2201918

(viii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, விமான நிலைய வீதி, அனுராதபுரம்.
தொ. பே. இல. : 025-2223178

(ix) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, நீர்கொழும்பு வீதி, மல்கடுவாவ, குருநாகல்.
தொ. பே. இல. : 037-2223789

(x) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி - யாழ்ப்பாணம்.
தொ. பே. இல. : 021-2222383

(xi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 07, ஜீ. எஸ். ஒழுங்கை, கல்முனைக்குடி-13, கல்முனை.
தொ. பே. இல. : 067-2229357

(xii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 242, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.
தொ. பே. இல. : 011-2597671/011-2587258

(xiii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, 326/2, பிரதான வீதி, களுத்துறை தெற்கு.
தொ. பே. இல. : 034-2224239

(xiv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 61/5, மினுவங்கொட வீதி, கம்பஹா.
தொ. பே. இல. : 033-2232874

(xv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, மொலவத்தை, மெதகம வீதி, மாதம்பை.
தொ. பே. இல. : 032-2248250

(xvi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 103, நீர்ப்பாசனப் பிரதேசம், புதிய நகரம், பொலன்னறுவை.
தொ. பே. இல. : 027-2223023

(xvii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, கச்சேரிக் கட்டிடத் தொகுதி, மொணராகலை.
தொ. பே. இல. : 055-2276504

(xviii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, கோவில் வீதி, ஹாவாஎலிய, நுவரெலியா.
தொ. பே. இல. : 052-2223702

(xix) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 11, விகாரை வீதி, மாத்தளை.
தொ. பே. இல. : 066-2223173

(xx) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 440, கண்டி வீதி, மீபிட்டிய, கேகாலை.
தொ. பே. இல. : 035-2223127

(xxi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 395, வக்வெல்ல வீதி, ஜுல்கஹா, காலி.
தொ. பே. இல. : 091-2235628

(xxii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 34, மிஹிந்து மாவத்தை, தங்காலை.
தொ. பே. இல. : 047-2241512

(xxiii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, மாங்குளம் வீதி, முள்ளியவளை, முல்லைத்தீவு.
தொ. பே. இல. : 021-2061012

(xxiv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, ஏ9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
தொ. பே. இல. : 021-2285615

(xxv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 103/7, தபால் கந்தோர் வீதி, திருகோணமலை.
தொ. பே. இல. : 026-2226569

(xxvi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 16/1/1, புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு.
தொ. பே. இல. : 065-2228130

(xxvii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, பூங்கா வீதி, வவுனியா.
தொ. பே. இல. : 024-2224679

(xxviii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 952/1, நல்லாயன் வீதி, மன்னார். தொ. பே. இல. : 023-2223404

10. தபாலின் போது தாமதமாகும் விண்ணப்பங்கள் மற்றும் காணாமல் போகும் விண்ணப்பங்களுக்கு பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் எவ்வித பொறுப்பும் ஏற்காது. ஆகவே விண்ணப்பதாரிகள் தாமதங்களை தவிர்க்கும் வகையில் தமது விண்ணப்பங்களை குறித்த காலத்திற்கு முன்பதாகவே அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தவிசாளர்,
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை.

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
ராஜகிரிய.

4-716

---

## கல்வி அமைச்சு

### கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

கல்வி அமைச்சில் வெற்றிடமாகக் காணப்படும் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போக்குவரத்து உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2017, ஓகத்து மாதம் கொழும்பு நகரில் மாத்திரம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**1. கல்வித் தகைமைகள் :**

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் சகல பாடங்கள் (பொது சாதாரணப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல். (பழைய பாடவிதானத்தின் கீழ் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்)

**2. உரிய துறையில் தொழிற் தகைமைகள் :**

I. மொறட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா, அல்லது

II. தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞானத் தேசிய டிப்ளோமா, அல்லது

III. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா, அல்லது

IV. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா, அல்லது

V. இலங்கைப் பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

VI. தொழிற்துறைக்குரிய தேசிய மற்றும் தொழில்சார் திறமை, (NVQ) மட்டம் 6 இன் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழை வழங்கும் நிறுவனங்களிடம் வினவி யோசனைகளைப் பெற்றுக் கொண்டதனைத் தொடர்ந்து மேற்கூறப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல முறைகளிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுச் சபையினால் வழங்கப்படும் ஏனைய தொழில்நுட்பத் தகைமையினைப் பெற்றிருத்தல்.

03. **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதை விடக் குறையாது இருக்க வேண்டியதுடன், 30 வயதை விட மேற்படாது இருக்க வேண்டும்.

(இதற்கமைய வயது தொடர்பில் தகைமைகள் பூர்த்தி செய்யப்படுவது விண்ணப்பதாரியின் பிறந்த தினமான 1999.05.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1987.05.30 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னராக இருப்பின் மாத்திரமாகும்)

04. **ஏனைய தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

II. சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருக்க வேண்டும்.

III. சகல பரீட்சார்த்திகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற மற்றும் பதவியில் கடமையினை மேற்கொள்ள போதியளவு உடல் உளத் தகைமை கொண்டவராக இருக்க வேண்டும்.

IV. பதவிக்கு நியமிப்பதற்காகத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக அங்கீகரிக்கப்படுவது, விண்ணப்பதாரி 01 மற்றும் 02 வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினமன்று சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரமாகும்.

05. **சம்பள அளவு**.- பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய எம்.என் 3-2016 மாதாந்த சம்பள அளவு (ரூபா 31,040-10X445-11X660-10X730-10X750-ரூபா 57,550) உரித்தாகும்.

06. **ஆட்சேர்ப்புப் பரீட்சை**.- எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய சேர்த்துக் கொள்ளப்படும். எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகள் திறமைத் தொடருக்கமைய சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகைமை கொண்டோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

எழுத்து மூலப் பரீட்சை :

| பாட இலக்கம் | பாடங்கள் | நேரம் (மணித்தியாலம்) | உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு | சித்தியடையும் புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 01 | 100 | 40% |
| 02 | பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் பாட இணைப் பரீட்சைகள் | 02 | 100 | 40% |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை (நேரம் 01 மணித்தியாலம்) | பரீட்சாத்தியின் சிந்தனை, தர்க்க ரீதியான பகுப்பாய்வு இயலுமைகள், நேர முகாமைத்துவம், தீர்வுகளைக் காணக்கூடிய பல்வகை மற்றும் சுருக்கமாக விடையளிக்கக்கூடிய வினாத்தாள்களைக் கொண்டமைந்துள்ளதுடன் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். |

*(தொடர்ச்சி )*

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 2. பொதுப்பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் பாடஇணைப் பரீட்சை) (நேரம் 02 மணித்தியாலம்) | வாகனங்களைப் பழுதுபார்த்தல், வாகனப் பராமரிப்பு, வாகனங்களின் குறைபாடுகளைத் தீர்மானித்தல், போக்குவரத்திற்குப் பொருத்தமற்ற வாகனங்களைத் தீர்மானித்தல், வாகன உதிரிப்பாகங்களைப் பொருத்துவது தொடர்பிலான மதிப்பீட்டினைத் தயாரித்தல், வாகனங்களின் எரிபொருள் வெளிப்படும் சேவை, வாகனக் காப்புறுதி, வாகனத்தைச் செலுத்தும்போது ஏற்படக்கூடிய விபத்து மற்றும் நட்டஈடுகள் போன்ற பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவினை அளவீடு செய்யும் கேள்விகளைக் கொண்டமைந்துள்ளது. சகல வினாக்களும் விடையளிக்க வேண்டும். |
| பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி: | இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் கொழும்பு நகரில் மாத்திரம் நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது. (விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைக்கமைய மத்திய நிலையம் தீர்மானிக்கப்படும்) |
| பொது நேர்முகப் பரீட்சை : | விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனப் பரிசீலனை செய்வதற்காக நடாத்தப்படும் பொது நேர்முகப் பரீட்சையாகும். புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. |

07. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியச் சம்பளம் கொண்டது, விதவைகள், தபுதாரர் ஓய்வூதியச் சம்பள நிதிக்கு பங்கு நிதி செலுத்த வேண்டும்.

II. தாபன விதிக் கோவையில் II ஆம் வாசகத்தில் 10 - 12 வரையான பிரிவுகளில் ஒழுங்கு விதிமுறைகள் உரியதாகும்.

III. மூன்று ஆண்டுகால தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் திணைக்களத்தின் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

IV. 2007.05.28 ஆந் திகதிய 2007/7 பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய மொழித் தேவையினைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

08. **பரீட்சார்த்தியின் அடையாளங்கள்**.- பொதுவான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல முறைகளிலும் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமாகும்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் முதற் பிரதி மற்றும் உரியவாறு உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
2. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

09. I. விண்ணப்பப்படிவத்தை 2017.05.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

II. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பப்படிவத்தை A4 அளவு கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 07 வரையும் இரண்டாம் பக்கத்தில் 08 தொடக்கம் 13 வரையும் மூன்றாம் பக்கத்தில் 14 தொடக்கம் 15 வரையுமாகத் தயாரித்து தமது கையெழுத்தின் மூலம் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிட வேண்டும்.

III. விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2017" எனக் குறிப்பிட வேண்டும்.

IV. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஏதேனும் நிறுவனத்தினால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர் ஊடாகவும் அவ்வாறல்லாத விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை அரச பாடசாலைப் பொறுப்பாளர், கோட்டத்தின் கிராம சேவை உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத் தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி பதவி கொண்ட உத்தியோகத்தர்கள், ரூபா 2,40,360 அல்லது அதனைவிட மேற்பட்ட வருடாந்த திரண்ட சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் அல்லது நிரந்தர பதவி நிலைத் தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

V. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர் தமது விண்ணப்பப்படிவத்தினை தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் பொறுப்பாளர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

VI. உரிய மாதிரிப்படிவத்திற்குப் பொருத்தமல்லாத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தாதுள்ள மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யாத, பூரணப்படுத்தப்படாத நிலையிலுள்ள விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யாமையினால் ஏற்படக்கூடிய நட்டத்தை விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது என்பதுடன், பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் அவதானிக்க வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்களை நிராகரிக்க முடியும்.

VII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளதாக முன் தீர்மானத்திற்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்படும் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரியின் ஒப்பம் மற்றும் ஒப்பத்தை உறுதிப்படுத்துவதற்குரியதாயின் திணைக்களப் பொறுப்பாளரின் சான்றிதழுடன் சரியாகப் பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டதல்ல என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

VIII. பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைக் கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு

வெளியே வதிவதாயின் அவ்விபரங்களுடன் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியினைத் துரிதகதியில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகளின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி அது தொடர்பில் வினவுவது பயன்மிக்கதாகும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவக்கூடிய ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதன் மூலம் பெற்ற பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிலிடும்போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினைத் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

V. பரீட்சார்த்தி தமக்கு உத்தரவிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தி அனுமதிப் பத்திரத்தைப் பரீட்சைக்குத் தோற்றும் தினமன்று அதனை மண்டபப் பொறுப்பாளருக்குக் கையளிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத பரீட்சார்த்திக்குப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். அச்சட்ட ஒழுங்குகள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்குட்பட வேண்டிய நிலை அவருக்கு ஏற்படும்.

*பரீட்சைப் பெறுபேறுகள்.*- வர்த்தமானி அறிவித்தலின் 06 ஆம் வாசகத்திற்கமைய பரீட்சைக்குத் தோற்றி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியல் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படும். இதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk இணையத்தளம் ஊடாக வெளியிடப்படும்.

10. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்.**- தங்களினால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் தங்களது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்குப் புறம்பாக அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அதற்குரிய செயற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு சேவையிலிருந்து இடைநிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். அக்கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பிலிடக்கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகங்களிலும் பணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்ட வேண்டும். பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். ஏதேனும் ஒரு காரணத்திற்கமைய பரீட்சைக் கட்டணத்தை மீளச் செலுத்துதல் அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றுதல் இயலாதென்பதுடன், காசுக் கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்பட மாட்டாது

12. இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில், மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடற்ற நிலைமைகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது என்பதனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பெலவத்த,
பத்தரமுல்ல,
2017, ஏப்பிறல் 21.

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2017

Examination for Recruitment of Transport Officer for Ministry of Education - 2017

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய கூட்டினுள் குறிப்பிடுக)

01. 1.1. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2. இறுதியில் குறிப்பிடப்படும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA, H.M.S.K.)

1.3. முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :----.

02. முகவரி :

2.1. அனுமதிப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
2.2. கடமை முகவரி (சிங்களம்/ தமிழில்) :----.
5.3. சொந்த முகவரி (சிங்களம்/ தமிழில்) :----.

03. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

04. 4.1. பால் : ஆண்/ பெண் :-

ஆண் - 0
பெண் - 1

(உரிய கூட்டினுள் குறிப்பிடுக)

4.2. திருமணமானவர் / திருமணமாகாதவர் :

திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2

(உரிய கூட்டினுள் குறிப்பிடுக)

05. தொலைபேசி இலக்கம்

5.1. அலுவலக :

5.2. சொந்த :

06. 6.1. தற்போதைய பதவி மற்றும் சேவை இடம் :----.
6.2. இப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.

07. 7.1 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

7.2. விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

08. இலங்கைப் பிரசையாயின், பரம்பரையாகவா ? இன்றேல் பதிவின் மூலமா ? :----.

09. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :

9.1. கல்வித் தகைமை :

| பரீட்சை | ஆண்டு | தோற்றிய பிரதான பாடங்கள் | சித்தி | பாடசாலையின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

9.2. தொழிற் தகைமை :

| பரீட்சை | ஆண்டு | தோற்றிய பிரதான பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. ஏனைய தகைமைகள் :----.

11. ஆங்கில மொழித் தேர்ச்சி :----.

12. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரங்கள் :

12.1. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் :----.
12.2. பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.
12.3. செலுத்திய நிதி :----.

பற்றுச் சீட்டினைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

13. இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனத் தேர்ந்தேடுப்பதற்கு முன்னர் இனங்காணும் பட்சத்தில தேர்ந்தெடுப்பதற்கு தகைமை அற்றவர் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் தெரியவரும் பட்சத்தில் எதுவித நட்டஈடும் செலுத்தாது சேவையிலிருந்து விலகுவதற்குக் கட்டுப்பட வேண்டும் என்பதனை நான் அறிந்துள்ளேன். மேலும் இப்பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் ஒப்பத்தை உறுதிப்படுத்தல் :

கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் ............................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளதாகவும் 2017 ........... மாதம் ........... திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தியவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்)
திகதி :----.

*15. திணைக்களம்/ நிறுவனப் பொறுப்பாளரின் சான்றுரை :*

*கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணபப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் இந்நிறுவனத்தின் ............................... பதவி வகிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................... விண்ணப்பப்படிவத்தினைப் பரிந்துரை செய்கிறேன். அவரின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் திருப்திகரமானது என்றும் எதுவித ஒழுக்காற்றுச் செயற்பாடுகளும் இல்லை என்றும் அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் சான்றுப்படுத்துகிறேன். அவர் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.*

----,
*திணைக்களம்/ நிறுவனப் பொறுப்பாளரின் கையொப்பம்*
*(பதவி முத்திரை).*

*திகதி :----.*

*4-749*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.